SRI A. V. P. ASAITHAMBI : இந்த போக்குவரத்து இலாகாவிற்கு ஆட்களை வேலைக்கு எடுக்கும்போது எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாக எடுக்கிறார்களா ? அல்லது வேறு எந்த முறையில் எடுக்கிறார்கள் ? எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாக எடுக்கவில்லையென்று சொன்னால், இந்த ஸ்தாபனத்தை வைத்திருப்பது அர்த்தமில்லாதது என்பதை சர்க்கார் அறியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த இலாகாவிற்கு வேண்டிய ஆட்களை நியமனம் செய்யும்போது எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாக வரக் கூடிய அபேட்சகர்களும் பரிசீலனை செய்யப்படுகிறார்கள்.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister, whether any drivers have been selected recently by the Director in the Kanyakumari district and if so, are they selected through the Employment Exchange?

THE HON. SRI V. RAMAIAH : My information is that in the Kanyakumari district six drivers and six conductors were selected through the Employment Exchange. That was not reported to the Committee because to meet an immediate requirement, they were appointed.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, in view of the Government Order and in view of the recruitment made contravening that order, will the Government please review the whole appointment?

THE HON. SRI V. RAMAIAH : A few persons were appointed which were later approved by the Government. I do not think in future there will be any room for direct recruitment without referring it to the Committee.

Community Development and National Extension Service Blocks in North Arcot district

* 21 *S.N.Q.*—SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Hon. the Minister for Electricity went through the records of the offices of the Community Development and National Extension Service Blocks in the North Arcot district during 1st July 1958 ;

(*b*) the names of the offices visited by him ;

(*c*) whether he has submitted any report to the Chief Minister in this regard ; and

(*d*) whether any false records were seized?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No.

(*b*) Does not arise.

(*c*) Does not arise.

(*d*) Does not arise.

SRI S. M. ANNAMALAI : சென்ற ஜூலை மாதத்தில் மின்சார அமைச்சர் அவர்கள் சமுதாய நலத் திட்ட அலுவலகங்களைப் பார்வையிட்டபோது சில தஸ்தாவேஜுகளைப் பார்வையிட்டார். அப்போது அவர் கிராம சர்வே சரிவர எடுக்கப்படவில்லை என்பதைக் கண்டு கொண்டார். இப்போது இல்லை என்று சொல்வதன் அர்த்தம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஜூலை மாதத்தில்தான் போகவில்லை என்று மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள். அதைத் தான் நான் சொன்னேன்.

Channel from Sathanur Dam

* 459 *Q.*—SRI K. VINAYAGAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) how much of water is allowed in the channel leading to Thirukoilur from Sathanur Dam for irrigation purposes;

(*b*) whether betterment tax is collected from the ryots of lands abutting the Thirukoilur channel; and if so, at what rate; and

(*c*) whether the channel is wide and deep enough to take more water?

THE HON. SRI P. KAKKAN : (*a*) There is no channel leading to Thirukoilur (South Arcot district) from Sathanur Dam.

(*b*) & (*c*) Does not arise.

SRI K. VINAYAKAM : சாத்தனூர் டாமிலிருந்து திருக்கோயிலூருக்கும், அதன் பக்கத்திலுள்ள நிலங்களுக்கும் தண்ணீர் கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் திட்டமேயில்லையா ?

THE HON. SRI P. KAKKAN : தண்ணீர் உண்டு. அதற்கு ஒரு கால்வாய் வெட்டவில்லை என்றுதான் சொன்னேன். சாத்தனூருக்கு 4½ மைலுக்கு அப்பால் ஒரு அணை கட்டப்படப்போகிறது. அதிலிருந்து தண்ணீர் கொடுக்கப்படும்.

SRI M. KANDASAMI PADAYACHI : சாத்தனூர் அணைக்கட்டுத் திட்டத்தினால் பழைய ஆயக்கட்டு நிலங்களுக்குப் பாதகம் எதும் ஏற்படாமல் இருக்க ஒரு திட்டத்தை வகுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே இருந்த பழைய ஆயக்கட்டு நிலங்களுக்கு பாதகமில்லாமல் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

SRI K. R. NALLASIVAM : திருக்கோயிலூரிலுள்ள பாசன நிலங்களுக்கு அபிவிருத்தி வரி வசூலிக்கப்படாவிட்டாலும், அபிவிருத்தி வரியை நிர்ணயிக்க அதிகாரிகள் போடப்பட்டிருந்தார்களே, அவர்கள் குறைந்த பட்ச வரியாகவும், அதிக பட்ச வரியாகவும் எவ்வளவு விதிக்க முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள் ?

THE HON. SRI P. KAKKAN : அபிவிருத்தி வரி உண்டு. ஆனால் எவ்வளவு என்பதற்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI A. GOVINDASAMY : சாத்தனூர் திட்டம் அமுலுக்கு வந்ததினால் திருக்கோயிலூர் வட்டம், மணலூர்பேட்டை குறுவட்டத்திலே 4,000 ஏக்கர் பாசன வசதி அடையும் என்று தெரிவிக்கப்பட்டது. இப்போது மணலூர்பேட்டையில் எவ்வளவு ஏக்கர் பாசனத்திற்கு வந்திருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் குறைத்துச் சொல்லுகிறார். நாலாயிரத்து இருநூறு ஏக்கர் பாசனத்திற்கு வரும்.

"The project was thrown open for irrigation on 10th November 1957 and so far 3,200 acres have received supply."